**ஆகஸ்ட் – 28**

# TNPSC துளிகள்

- இந்தியா-கென்யா கூட்டு வர்த்தகக் குழுவின் 8வது கூட்டம் கென்யாவின் நைரோபியில் நடைபெற்றது.
- பாஜக தலைவரும் முன்னாள் பிரதமருமான அடல் பிஹாரி வாஜ்பாயி பற்றிய புத்தகமான 'அடல் ஜி நே கஹா' (Atal Ji Ne Kaha) ஆனது பிரதமரால் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் பிரிஜேந்திர ரெஹியால் எழுதி தொகுக்கப்பட்டது. இவர் இதற்கு முன் புகழ்பெற்ற தூர்தர்ஷன் தயாரிப்பாளராகவும், மூத்த பத்திரிக்கையாளராகவும் இருந்தவர் ஆவார்.
- காங்க்டாக்-ன் ராஜ்பவனில் நடைபெற்ற விழாவில் சிக்கிமின் 16வது ஆளுநராக கங்கா பிரசாத் பதவியேற்றார். இவ்விழாவில் இடைக்கால சிக்கிம் உயர் நீதிமன்ற நீதிபதியான மீனாட்சி எம்.ராய் பிரசாத் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
    - இதற்கு முன் ஆளுநராக இருந்த சீனிவாஸ் பாட்டீல்-ஐத் தொடர்ந்து இவர் பதவியேற்றுள்ளார்.
- உத்திரக்காண்டின் 7வது ஆளுநராக பாபா ராணி மௌரியா பதவியேற்றார். உத்தரகாண்ட் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ராஜீவ் சர்மா டேஹ்ராடூனிலுள்ள ராஜ்பவனில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். கிருஷண் காந்த் பால்-ஐத் தொடர்ந்து மௌரியா ஆளுநராகியுள்ளார்.
    - மேலும் இவர் மார்கரேட் என்பவருக்கு (ஆகஸ்ட் 2009 முதல் மே 2012 வரை) அடுத்து உத்தரகாண்ட் ஆளுநராகும் இரண்டாவது பெண்மணி ஆவார்.

# சர்வதேசச் செய்திகள்

## 4-வது ஆசிய தேர்தல் பங்குதாரர்களின் மன்றம்

- ஆசியப் பிராந்தியத்தில் மக்களாட்சி மற்றும் தேர்தல்களின் நிலை குறித்து விவாதிப்பதற்காக நான்காவது ஆசிய தேர்தல் பங்குதாரர்களின் மன்றம் இலங்கையின் கொழும்புவில் தொடங்கியது.
- இதன் கருத்துருவானது "முன்னேறும் தேர்தல் வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மை - குழுவாக ஜனநாயகத்தை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல்" ஆகும்.
- மஹாராஷ்டிராவின் தலைமைத் தேர்தல் அதிகாரி அஸ்வினி குமார் மற்றும் ஒரு அரசு சாரா நிறுவனம் ஆகியோர் இந்தியா சார்பாக இதில் கலந்து கொண்டனர்.
- இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மன்றமானது இலங்கை தேர்தல் ஆணையம் மற்றும் நேர்மையான தேர்தலுக்கான ஆசிய அமைப்பு (ANFREL - Asian Network for free Elections) ஆகியவற்றின் உதவியுடன் தெற்கு ஆசியாவில் முதன் முறையாக நடைபெற்றது.

## சர்வதேச நடுவர் தீர்ப்பாயம் - ரிலையன்ஸ் ஆற்றல் நிறுவனம்


- ரிலையன்ஸ் ஆற்றல் என்ற நிறுவனமானது தனது சொந்தத் துணை நிறுவனமான ரிலையன்ஸ் பவர் நெதர்லாந்து BV என்ற நிறுவனம் பிரஸ்டீஜ் கேபிடல் ஹோல்டிங்ஸ் (செஷல்ஷை மையமாகக் கொண்டு இயங்கும் நிறுவனம்) மற்றும் கோகோஸ் ஜியாங் ஆகிய நிறுவனங்களுக்கு எதிரான வழக்கில் சர்வதேச நடுவர் தீர்ப்பாயத்தால் 56 மில்லியன் இழப்பீடு பெற்றதாக அறிவித்துள்ளது.
- இந்தோனேஷியாவில் உள்ள நிறுவனங்களின் நிலக்கரி சுரங்கம் தொடர்பான ஒப்பந்தப் பிரச்சனைக்காக நடுவர் தீர்ப்பாயத்தில் வழக்கு நடைபெற்றது.
- இந்தோனேஷியாவில் உள்ள சுகிகோ குழுவின் உரிமையாளர் கோகோஸ் ஜியாங் ஆவார். இந்தோனேஷியாவில் 2010ஆம் ஆண்டில் ரிலையன்ஸ் நிறுவனமானது பொருளாதார சலுகைகளை இந்த நிறுவனத்தின் 3 நிலக்கரி சுரங்கங்களிலிருந்து பெற்றது.
- நடுவர் தீர்ப்பாயமானது சிங்கப்பூரில் உள்ள சிங்கப்பூர் சர்வதேச நடுவர் மையத்தின் விதிகளின் படி (SIAC - Singapore International Arbitration Centre) ஏற்படுத்தப்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மைய (CSE) ஆய்வு


- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தின் (CSE- Centre for Science and Environment) மூலம் மேற்கொண்ட 'நகர்ப்புற பயணம்' (The Urban Commute) என்ற ஆய்வில் போபால் நகரமானது குறைந்த உமிழ்வு மற்றும் ஆற்றல் பயன்பாட்டில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- பொதுப் போக்குவரத்து மற்றும் நடைப்பயணத்தின் அதிகப் பயன்பாட்டின் காரணமாக கொல்கத்தாவானது 6 மிகப்பெரிய நகரங்களில் மிகக் குறைந்த உமிழ்வைக் கொண்டுள்ளது.
- அதிக ஒட்டுமொத்த உமிழ்வு மற்றும் எரிபொருள் பயன்பாட்டின் காரணமாக டெல்லியின் தரம் கீழிறங்கியுள்ளது.
- இந்த ஆய்வு 14 நகரங்களில் கீழ்க்காண்பவற்றை அடிப்படையாகக் கொண்டது.
    - வெப்பத்தை வெளியேறாமல் பிடித்து வைக்கும் கார்பன்-டை-ஆக்சைடு உமிழ்வு
    - நுண்துளைப் பொருள்கள் போன்ற நச்சு மாசுக்கள் மற்றும் நைட்ரஜன் ஆக்சைடு
    - நகர்ப்புற பயணத்தின் போது எரிக்கப்படும் சக்தி
- ஒட்டு மொத்த உமிழ்வு மற்றும் எரிபொருள் நுகர்வில் முதல் 3 இடங்கள்
    - போபால்
    - விஜயவாடா
    - சண்டிகார்

**Graph 29: Based on overall emissions and energy consumption**




- ஒரு முறை பயணத்தில் ஏற்படும் உமிழ்வு மற்றும் ஆற்றல் நுகர்வில் முதல் 3 இடங்கள்
    - கொல்கத்தா
    - மும்பை
    - போபால்

**Graph 30: Based on per travel trip emissions and energy consumption**



# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## ஆசியாவை மாற்றியமைத்ததில் பெரும் பங்களிப்பாளர் விருது ( Game Changer award )

- இந்தியாவில் பிறந்தவரும் பெப்ஸிகோவின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியுமான இந்திரா நூயி, உலகளாவிய கலாச்சார அமைப்பான ஆசியச் சங்கத்தால் (global cultural organisation Asia Society) 2018 ஆம் ஆண்டின் ஆசியாவை மாற்றியமைத்ததில் பெரும் பங்காளிப்பாளர் என்ற விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.
- நூயி 'அவரது முன்னோடிகளின் வணிகச் சாதனைகளை அங்கீகரித்தல், மனிதாபிமான சாதனைகள், சிறுமிகள் மற்றும் பெண்களுக்காக வாதிடுதல் ஆகியவற்றிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



- அவர் 12 ஆண்டுகளுக்குப் பிறகு பெப்சிகோ நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.
- இந்த 2018 ஆசியாவை மாற்றியமைத்தலில் பெரும்பங்களிப்பாளர் விருதானது வரையறுக்கப்பட்ட தைரியம், அற்புதமான வேலைகள், உலகின் சக குடிமகன்களை ஊக்குவித்தல் போன்றவற்றில் தடைகளை உடைத்தல் போன்ற தகுதிகளில் தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கு வரும் அக்டோபரில் வழங்கப்படவுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## FIFA U-20 உலகக் கோப்பை - பிரான்ஸ் 2018

- ஜப்பானின் கால்பந்து வரலாற்றில் முதல் முறையாக 2018ம் ஆண்டின் FIFA U-20 மகளிர் உலகக் கோப்பை இறுதி போட்டியில் ஸ்பெயினை வீழ்த்தி ஜப்பான் அணி கோப்பையை கைப்பற்றியுள்ளது.

- தகாரடா சவோரி கோல் அடிக்க உதவி புரிந்தமைக்காகவும் தானே அடித்த கோல் காரணமாகவும் சிறந்த ஆட்டக்காரராக தேர்வு செய்யப்பட்டார்.




- மேலும் தகாரடாவுக்கு வெண்கல காலணி மற்றும் அடிடாஸ் சில்வர் பந்து வழங்கப்பட்டது. அதே வேளையில் மினாமி என்ற வீரருக்கு வெண்கல பந்து வழங்கப்பட்டது.
- ஜப்பான் அணியானது ஃபேர்-ப்ளே (Fair-Play) விருதையும் பெற்றது. இத்துடன் FIFA U-20 உலகக் கோப்பை பிரான்ஸ் 2018 முடிவடைந்தது. இங்கிலாந்து அணியானது இதுவரைப் பெறாத நிலையான மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

# முக்கிய தினங்கள்

## சமஸ்கிருத திவாஸ் - ஆகஸ்ட் 26

- சமஸ்கிருத திவாஸ் ஒவ்வொரு ஆண்டும் சரவண பூர்ணிமாவில் (இந்து நாள்காட்டியின் படி ஷர்வண மாதத்தின் முழுநிலவு நாளன்று) கொண்டாடப்படுகிறது.
- இந்த ஆண்டு இது ஆகஸ்ட் 26, 2018ல் கொண்டாடப்பட்டது. கடந்த ஆண்டு இது ஆகஸ்ட் 6 மற்றும் 7ம் தேதிகளில் கொண்டாடப்பட்டது.
- சமஸ்கிருத திவாஸ் முதன் முதலில் 1969ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. இது சமஸ்கிருதத்தின் தாக்கத்தையும் முக்கியத்துவத்தையும் பற்றி பேசும் பல்வேறு நிகழ்வுகளை உள்ளடக்கியது.

- - - - - - - - - - - - - - -